

பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மண்ணச்சநல்லூர் ஒன்றியத்தில் இருக்கும் பூலாம்பாளையம் கிராமத்தில் வேட்பாளர் அருண் நேருவுக்கு கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே என் நேரு உதய சூரியன் சின்னத்திற்கு பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார். உடன் வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எல்.ஏ. தியாகராஜன் எம்எல்ஏ கதிரவன் ஒன்றிய செயலாளர்கள் இளங்கோவன், செந்தில்குமார், சேர்மன் ஸ்ரீதர், காங்கிரஸ் கலை சுஜாதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கும்பகோணம் மாநகரக் கழக அலுவலகத்தில், கும்பகோணம் தொகுதி தேர்தல் பணிமனையினை ‘இந்தியா’ கூட்டணியின் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஆர்.சுதா திறந்து வைத்தார். உடன் தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., செ.இராமலிங்கம் எம்.பி, மு.சண்முகம் எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், கோவி.செழியன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, க.நசீர்முகமது, எஸ்.துரைமுருகன், ஜெ.நடராஜன், மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் கழக வேட்பாளர் கே.என்.அருண் நேருவை ஆதரித்து

# எளம்பலூரில் இந்திய கம்யூனிஸ்ட் இரா.முத்தரசன் வாக்குச்சேகரித்தார்!

பெரம்பலூர், மார்ச் 31-

பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே.என். அருண்நேரு விற்கு, பெரம்பலூர் ஒன்றியத்திற்குட்பட்ட எளம்பலூர் கிராமத்தில் திரண்டிருந்த பொது மக்களிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் வாக்குகள் சேகரித்தார்! அப்போது அவர் பேசுகையில்,நள்ளிரவுக் கூட்டணி, கள்ளக்கூட்டணி இரண்டையும் தோற்கடிக்க வேண்டும் என்றும் ஜனநாயகத்திற்கு விரோதமாக செயல்பட்டு வரும் மத்திய அரசை அகற்ற வேண்டும் என்றும் பேசினார்!

போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் கலந்து கொண்டனர்!

பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே.என். அருண்நேரு, பெரம்பலூர் ஒன்றியத்திற்குட்பட்ட எளம்பலூர், செங்குணம், அருமடல், கவுல்பாளையம், நெடுவாசல், க. எறையூர், கல்பாடி, அ.குடிக்காடு, அயிலூர், சிறுவாச்சூர், நொச்சியம், செல்லியம்பாளையம், புதுநடுவலூர், ரெங்கநாதபுரம், தம்பிரான் பட்டி,

கீழ்க்கணவாய், வேலூர், சத்திரமனை உள்ளிட்ட கிராமங்களில் பொதுமக்களிடம், பெரம்பலூர் ஒன்றியச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எம்.ராஜ்குமார் தலைமையில் வாக்குகள் சேகரித்தார்.

எளம்பலூர் கிராமத்தில் திரண்டிருந்த பொதுமக்களிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு பேசுகையில், நள்ளிரவுக்கூட்டணி, கள்ளக்கூட்டணி ஆகிய இரண்டையும் தமிழகத்தில் தோற்கடிக்க வேண்டும் என்றும், ஜனநாயகத்திற்கு விரோதமாக செயல்பட்டு வரும் மத்திய அரசை அகற்ற வேண்டும் என்றும் பேசினார்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், பெரம்பலூர் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், எஸ்.அண்ணாதுரை,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரி பாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.ஆர்.சிவசங்கர், தொ.மு.ச.கவுன்சில் பேரவை மாவட்ட தலைவர் கே.கே.எம்.குமார், தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் மாவட்ட செயலாளர் ஆர். ரெங்கசாமி,

எளம்பலூர் முன்னாள் ஊராட்சி மன்றக் தலைவர் ஆர்.சி.ராமசாமி,

காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் சுரேஷ், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் ஜெயசீலன் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி, இடது கம்யூனிஸ்ட், வலது கம்யூனிஸ்ட் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் கட்சி, அகில இந்திய தொழிலாளர் கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(பெரம்பலூர் நாடாளு மன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் கே.என். அருண்நேருவிற்கு, கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் முத்தரசன் வாக்குகள் கேட்டு எளம்பலூர் கிராமத்தில் பேசுகையில்,

ஜனநாயகம் தோற்று போய் விட்டது. உதாரணத்திற்கு ம.தி.மு.க.மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சிகளுக்கு சின்னம் வழங்கவில்லை. தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல் பாரபட்சம் காட்டி வரும் பா.ஜக.அரசை தூக்கி எறிய வேண்டும். தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கள்ளக் கூட்டணி, நள்ளிரவுக் கூட்டணி ஆகியவற்றை தோற்கடிக்க வேண்டும் என்றும் தி.மு.க.தலைமையிலான கூட்டணி, மகத்தான கூட்டணி, வெற்றிக் கூட்டணி எனவும் கட்சிகளுக்கு சின்னம் ஒதுக்குவதில் தேர்தல் ஆணையம் பாரபட்சம் காட்டுகிறது. தேர்தல் நடக்குமா என்று சந்தேகம் எழுந்துள்ளது. பா.ஜ.க.அணியில் போட்டியிடும் கட்சிகளுக்கு உடனுக்குடன் சின்னம் வழங்கப்படுகிறது. நடுநிலையோடும், நேர்மையோடும் செயல்படவேண்டிய தேர்தல் ஆணையம் இன்றைக்கு கேள்விக்குறியாக இருக்கிறது.

நாட்டில் உள்ள ஜனநாயகத்தைக்காப்பாற்றவும், அரசியலமைப்புச் சட்டத்தைக் காப்பாற்றவும், மதச் சார்பின்மை என்ற மகத்தான கொள்கையைக் காப்பாற்றவும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்றும் முத்தரசன் பேசினார்).

---

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயணம்!



**01.04.2024 ( திங்கட்கிழமை )**

### திருநெல்வேலி

| நேரம் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| மாலை 4.00 | இராதாபுரம் (திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்) | பெருந்தலைவர் காமராஜர் சிலை அருகில், வள்ளியூர் |

### கன்னியாகுமரி

| நேரம் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| மாலை 4.30 | கன்னியாகுமரி | குழித்துறை அண்ணா சிலை |
| மாலை 5.30 | | புதுக்கடை பேருந்து நிலையம் |
| மாலை 6.15 | | குளச்சல் பீச் முக்கு |
| மாலை 7.00 | | நாகர்கோவில் வடசேரி அண்ணா சிலை |
| மாலை 7.45 | | கொட்டாரம் ஜங்ஷன் |

---

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வாசு விக்ரம் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல் -19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, வாசு விக்ரம் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு:-

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 03.04.2024 | - | திருவள்ளூர் |
| 04.04.2024 | - | அரக்கோணம் |
| 05.04.2024 | - | வேலூர் |
| 06.04.2024 | - | கிருஷ்ணகிரி |
| 07.04.2024 | - | திருவண்ணாமலை |
| 08.04.2024 | - | ஆரணி |
| 09.04.2024 | - | காஞ்சிபுரம் |
| 10.04.2024 | - | திருபெரும்புதூர் |
| 11.04.2024 | - | தென்சென்னை |
| 12.04.2024 | - | மத்திய சென்னை |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"** சென்னை - 18 நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,** தி.மு.க.

---

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து முக்குலத்தோர் புலிப்படைத் தலைவர் கருணாஸ் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, முக்குலத்தோர் புலிப்படை தலைவர் கருணாஸ் அவர்கள் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு:-

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 02.04.2024 | - | சிவகங்கை |
| 03.04.2024 | - | இராமநாதபுரம் |
| 04.04.2024 | - | இராமநாதபுரம் |
| 05.04.2024 | - | திருநெல்வேலி |
| 06.04.2024 | - | தென்காசி |
| 07-04-2024 | | விருதுநகர் |
| 11-04-2024 | | தேனி |
| 12-04-2024 | | தேனி |
| 13-04-2024 | | மதுரை |
| 14-04-2024 | | திண்டுக்கல் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"** சென்னை - 18 நாள்- 29.03.2024

**தலைமைக் கழகம்,** தி.மு.க.

---

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வாகை சந்திரசேகர் தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம்! (திருத்தப்பட்டது)

### தலைமைக் கழகம் அறிவிப்பு



2024 ஏப்ரல்-19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, கழக கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார். அதன் விவரம் பின்வருமாறு :

| தேதி | | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|
| 01-04-2024 | - | திருநெல்வேலி |
| 02-04-2024 | - | கன்னியாகுமரி |
| 03-04-2024 | - | தூத்துக்குடி |
| 04-04-2024 | - | தென்காசி |
| 05-04-2024 | - | விருதுநகர் |
| 06-04-2024 | - | தேனி |
| 07-04-2024 | - | மதுரை |
| 08-04-2024 | - | இராமநாதபுரம் |
| 09-04-2024 | - | இராமநாதபுரம் |
| 10-04-2024 | - | சிவகங்கை |
| 11-04-2024 | - | தஞ்சாவூர் |
| 12-04-2024 | - | பெரம்பலூர் |
| 13-04-2024 | - | சேலம் |
| 14-04-2024 | - | நாமக்கல் |
| 15-04-2024 | - | ஈரோடு |
| 16-04-2024 | - | கோயம்புத்தூர் |

மேற்குறிப்பிட்ட நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் தங்களுக்குள் கலந்துபேசி, ஒன்றிணைந்து, பிரச்சாரம் தொகுதி வாக்காளர்களை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”** சென்னை - 18 நாள்- 29.3.2024

**தலைமைக் கழகம்** தி.மு.க.

---

### நாமக்கல் கிழக்கு மாவட்டம்

# ராசிபுரம் ஒன்றியத்தில் செயல்வீரர்கள் கூட்டம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் - அமைச்சர் - மருத்துவர் மா.மதிவேந்தன் பங்கேற்பு

நாமக்கல் மார்ச் 31

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் ஒன்றிய தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகள் சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் .

கொங்கு திருமண மண்படத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஒன்றியத் தி.மு.க. செயலாளரும், ராசிபுரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவருமான கே.பி. ஜெகந்நாதன் தலைமை வகித்தார். கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டு, தி.மு.க. அரசின் திட்டங்கள் குறித்தும், கட்சியினரின் தேர்தல் பணிகள் குறித்தும் விளக்கம் அளித்து சிறப்புரையாற்றினர்.

இந்த கூட்டத்தில் நாமக்கல் மாவட்ட தி.மு.க. பொருளாளரும், தொகுதி தேர்தல் பொறுப்பாளருமான ஏ.கே. பாலசந்தர், பேரூர் கழகச் செயலாளர்கள் பொன். நல்லதம்பி சுப்பிரமணி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சத்தியசீலன் மற்றும் சிவக்குமார், மணிமாறன், ராம்குமார், சார்பு அணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.





சுற்றுலா துறை அமைச்சர் ராமச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் செல்வி பொ. லட்சுமி மற்றும் குன்னூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் சுனிதா நேரு ஆகியோர் முன்னிலையில் உபதலை, எடபள்ளி,ஜகதளா பேரூராட்சி, பேரட்டி, உலிகல் பேரூராட்சி, குன்னூர் கன்டோன்மென்ட், வண்டி சொலை மற்றும் பர்லியார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தி.மு.க. மகளிர் அணி சகோதரிகளுடன் மகளிர் அணி பிரச்சாரகுழு ஆலோசனை கூட்டம் நடத்தினார். மேலும் கீழ் கோத்தகிரி படுகா சமுதாயத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களுடன் அந்த பகுதியில் நாடாளுமன்றத் தேர்தல் குறித்து கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன் முன்னிலையில் ஆலோசனை நடத்தினார்.



நெல்லிக்குப்பம் நகரத்தில் 25 ஆண்டு காலம் நகரம் கழக துணை செயலாளராக ஐந்தாண்டு காலம் நகர மன்ற துணைத் தலைவராக தன்னலமின்றி பணியாற்றிய கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நெல்லிக்குப்பம் புகழேந்தி அவர்களின் தந்தையார் ப. சுப்பிரமணியன் அவர்களின் 22 ஆவது நினைவு நாளை முன்னிட்டு நெல்லிக்குப்பம் நகர கழக அலுவலகத்தில் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து 500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது நிகழ்வில் நகர மன்ற தலைவர் ஜெயந்தி ராதாகிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதிகள் வேலு வீரமணி கதிரேசன், பொருளாளர் ஜெயசீலன், துணை செயலாளர் சீனிவாசன், மனோகரி, முருகன், நகரமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீதர், பூபாலன், வட்ட செயலாளர்கள் அன்பழகன், ராஜாராம், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் மாறன் சபா, இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜா, விமல், கரன் காசிம், எஸ்.பி.ஸ்டாலின், அறிவுக்கரசு, யாசின் உள்ளிட்ட கழக உடன்பிறப்புகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.